DEPOSITION OF WITNESS

**In the Court of II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No : 205/2025**
**Present – S.Gopinathan, B.Sc.,B.L.,**
**II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**
Prosecution witness -5 (LW -11)
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | |
|---|---|---|---|
| Name | : **திரு.வேல்முருகன்** | Caste | : |
| Father Name | : **திரு.முத்துசாமி** | Calling | : **காவல் ஆய்வாளர் (ஓய்வு)** |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **02.07.2026.**

**PW -5 (LW - 11)**

**(**எதிரிகள் ஆஜர்.**)** **(**சாட்சி அவருடைய ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலிசார் மூலம் அடையாளம் காணப்பட்டார்.**)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது காவல் துறை பணியில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். இந்த வழக்கு புலன் விசாரணை அதிகாரி நான்தான். கடந்த 17.05.2022–ம் தேதி இந்த வழக்கில் அ.சா.1–யிடம் புகார் வாக்குமூலம் பெற்று இதச பிரிவுகள் 294(பி), 323, 307 கீழ் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.2** ஆகும். சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரித்து தயார் செய்த பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.3**. வரைபடம் **அ.த.சா.ஆ.4** ஆகும். 1–வது எதிரியை கைது செய்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து கைப்பற்றிய கத்தி **சா.பொ.1**. அதற்கான மகஜர் **அ.த.சா.ஆ.5**.

எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அரசு மருத்துவரை விசாரித்து பெற்ற விபத்து பதிவேடு **அ.த.சா.ஆ.6**. அ.சா.1 க்கான காயச்சான்று **அ.த.சா.ஆ.7**.

II ADJ COURT, TRICHY

மின்வாரிய துறை அலுவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எ.த.கு.வி :**

| | |
|---|---|
| **கேள்வி** | அ.சா.1 எதிரிகள் மீது எந்தவித புகாரும் கொடுக்கவில்லை என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | வழக்கு ஆவணங்கள், சாட்சிகள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கின் தன்மைக்கு ஏற்ப பொய்யாக ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | எதிரிகளை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும், அவர்கள் எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |

**மறுவிசாரணை :** இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 02.07.2026 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 02.07.2026

HADJ COURT, TRICHY